செ.கு.75 DT. 12.07.2011

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 12.7.2011

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வேட்டைக்காரன்புதூர் கிராமம், டாப்சிலிப் எருமைப்பாறைப் பகுதியில் திரு. ரவி என்பவரின் மகன் திலீப்குமார் 10.7.2011 அன்று முகாமில் உள்ள யானை தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

திரு திலீப்குமார் என்பவரை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் ஆணையிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்